**தலைப்பு 5 – அமைச்சரவை அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 5 – அமைச்சரவை அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 மே 16 ஆம் திகதி அமைச்சரவையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவும்**

---

அமைச்சரவை அலுவலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 77.40 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 65.56 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சரவை அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 11.84 மில்லியன் அதாவது 15 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 67.55 | 62.90 | 4.65 | 7 |
| மூலதன | 9.85 | 2.66 | 7.19 | 73 |
| மொத்தம் | 77.40 | 65.56 | 11.84 | 15 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சரவை அலுவலகத்திற்குரிய விடய இலக்கம் 00501 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.59 | 2.50 | 2.39 | 2.96 | 13.00 | 9.05 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சரவை அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி கணக்கு மீதிகள் ரூபா 0.21 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சரவை அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 184,000 ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அலுவலகம் | வைப்புக் கணக்கு இல. | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| ---------------------------- | -------------------------- | ---------- |
| | | ரூபா. மில்லியன் |
| அமைச்சரவை அலுவலகம் | 6000/0000/00/0016/0029 | 180,000 |
| -மேற்படி- | 6000/0000/00/0018/0036 | 4,000 |
| | | -------- |
| மொத்தம் | | 184,000 |
| | | ===== |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

அமைச்சரவை அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.1.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

அலுவலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அலுவலகத்தினால் அந்த அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

## 3.3 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 6 மில்லியன் தொகையான ஆவணப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபிக்கும் செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் விடயப்பரப்பு தொடர்பாக தூரநோக்கு தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், எதிர்காலத்தில் ஏற்படுகின்ற தொழில்நுட்ப மாற்றங்களுக்கும் இணங்கும் வகையில் திட்டமிடப்பட வேண்டியமையினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தாமதமடைந்திருந்தது.

## 3.4 செயலாற்றல்

அலுவலகத்தினால் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்புக்களின் எண்ணிக்கை 1243 ஆக இருந்தது. அதில் 94 குறிப்புக்கள் அமைச்சரவைக்கோ அல்லது நிறுவன நடவடிக்கை தொடர்பாக அமைச்சரவை உப குழுவிற்கோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 1149 குறிப்புக்களில் 1045 குறிப்புக்களுக்காக இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அமைச்சரவைக்கு அல்லது நிலுவை செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உப குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இறுதித் தீர்மானம் எடுக்கப்படாதிருந்த குறிப்புக்களின் எண்ணிக்கை 104 ஆகும். 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றல், கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு 2016 மே 13 ஆந் திகதிய கடிதத்தில் கோரப்பட்டிருந்த போதிலும், 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 11 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 32 | 25 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 32 | 25 | 07 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | - | - |
| | மொத்தம் | 90 | 71 | 19 |